“ විශිෂ්ඨ රාජ්‍ය සේවාවක් සඳහා ඇප කැපවෙමු ”

# ප්‍රධාන ලේකම් කාර්යාලය - බස්නාහිර පළාත
# பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம்
# OFFICE OF THE CHIEF SECRETARY - WESTERN PROVINCE

SLSI SYSTEM CERTIFIED ISO 9001

SLAB ACCREDITED ISO/IEC: 17021 QMS-001-01

204, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
204, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.

ප්‍රධාන ලේකම් / பிரதான செயலாளர் / Chief Secretary
දුරකථන /தொலைபேசி/ Telephone - 011 - 2092599
ෆැක්ස් /பெக்ஸ்/ Fax - 011 - 2092601
ඊ-මේල් /மின்னஞ்சல்/ E-mail - chiefsecretary@wpc.gov.lk
පොදු දුරකථන / தொலைபேசி இலக்கம் / General Telephone - 011 - 2093000

මගේ අංකය / எனது இலக்கம் / My No. CSWP/ADM/18-38/FI/01-2019 | ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No. | දිනය / திகதி / Date 2019/07/11

ஆளுநர் செயலாளர் (மே.மா.),
செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.),
சபைச் செயலாளர் (மே.மா.),
அனைத்து அமைச்சுக்களதும் செயலாளர்கள் (மே.மா.),
பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்/ ஆளணி மற்றும் பயிற்சி/ நிதி/ திட்டமிடல்/ பொறியியல்),
மாகாண வருமான ஆணையாளர் (மே.மா.),
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (மே.மா.),
நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
பிரதான செயலாளரின் இணைப்புச் செயலாளர்,

**<u>அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 11/2019, 14/2019 மற்றும் அரச நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம் இலக்கம் 02/2019 ஆகிவற்றை மேல் மாகாணத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல்.</u>**

அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளை மேல் மாகாணத்திற்கு உரியதாக்கிக் கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளதாக ஆளுநர் செயலாளரின் இலக்கம் GOS/ADM/02/19/01/2019 மற்றும் 2019.07.05 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அச்சுற்றறிக்கைகளின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

| தொடரிலக்கம் | சுற்றறிக்கை இலக்கம் மற்றும் திகதி | விடயம் |
|---|---|---|
| 01. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 11/2019, 2019-05-06 | அரச நிறுவன வளாகங்களுள் வெற்றிலை, புகையிலை மற்றும் பாக்கு உற்பத்திப் பொருட்களின் பாவனை மற்றும் விற்பனையினை தடை செய்தல் |
| 02. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 14/2019, 2019-05-31 | 2019 வரவு செலவுத் திட்ட பரிந்துரைகளுக்கேற்ப ஓய்வூதியக் கொடுப்பனவைத் திருத்துதல் |
| 03. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2019, 2019-05-30 | ஓய்வூதியம் வழங்குவதில் மரணமடைந்த ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மோசடியான முறையில் ஓய்வூதியம் வழங்குவதைத் தடை செய்வதற்குரிய சந்தர்ப்பங்களை அதிகரித்தல் |

02. அச்சுற்றறிக்கையின்படி செயற்படுமாறும் உங்களின் கீழுள்ள அனைத்து திணைக்களப் பிரதானிகளுக்கும், தாபனப் பிரதானிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே.என்.சூரியாரச்சி,
உதவிப்பிரதான செயலாளர் (நிர்வாகம்),
பிரதான செயலாளருக்காக (மே.மா.)

| නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් / பிரதிப் பிரதான செயலாளர் / Deputy Chief Secretary | පාලන / நிர்வாகம் / Administration | පිරිස් හා පුහුණු / ஆளணி மற்றும் பயிற்சி / Personnel & Training | මුදල / நிதி / Finance | සැලසුම් / திட்டமிடல் / Planning | ඉංජිනේරු / பொறியியல் / Engineering | ප්‍රධාන අභ්‍යන්තර විගණක / பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் / Chief Internal Auditor |
|---|---|---|---|---|---|---|
| | Tel : 0112092606<br>Fax : 0112092609<br>dcsadmin@cs.wpc.gov.lk | Tel : 0112092631<br>Fax : 0112092647<br>dcspt@cs.wpc.gov.lk | Tel : 0112092640<br>Fax : 0112092636<br>dcsfinance@cs.wpc.gov.lk | Tel : 0112092532<br>Fax : 0112092533<br>dsplan@cs.wpc.gov.lk | Tel : 0112092501<br>Fax : 0112092505<br>dcs@eng.wpc.gov.lk | Tel : 0112092628<br>Fax : 0112092625<br>cia@cs.wpc.gov.lk |

*அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 02/2019*

எனது இலக்கம் : Pns/P8/02/18
பொது நிருவாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

*2019.05.30*

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
மாவட்ட செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
பிரதேச செயலாளர்கள்

**ஓய்வூதியங்களைச் செலுத்தும் போது மோசடியான முறையில், மரணித்த ஓய்வூதியகாரர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதைத் தடுப்பதற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்**

ஓய்வூதியங்களை செலுத்தும் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் மற்றும் மிகவும் வினைத்திறன்மிக்கதாக்கும் நோக்கில் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட *19/2006* ஆம் இலக்க, *01/2008* ஆம் இலக்க, *11/2009* ஆம் இலக்க, *16/2009* ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமானது. அச்சுற்றறிக்கைகள் மூலம் வாழ்வுச் சான்றிதழ் பெறுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் *09/2014* ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை மூலம் வாழ்வுச் சான்றிதழ் வழங்கப்படாத ஓய்வூதியகாரர்ககளின் ஓய்வூதியங்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

*02* வெளிநாட்டில் வாழும் இலங்கை ஓய்வூதியகாரர்கள் தொடர்பில் வாழ்க்கைச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஓய்வூதியத் திணைக்களத்தினால் பின்பற்றப்படும் நடைமுறைகளை அதே விதத்தில் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

*03* தற்போது நடைமுறையிலுள்ள இந்தச் செயற்பாடுகளை மேலும் வினைத்திறன்மிக்கதாக்குவதன் மூலம் சிரேஷ்ட ஓய்வூதியகாரர் சமுதாயத்திற்கு ஓய்வாக வாழ்வதற்கு வாய்ப்பளிப்பதற்காகப் பின்வரும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

*04* இலங்கையில் வாழ்கின்ற ஓய்வூதியகாரர்கள் மரணிப்பது தொடர்பான அறிக்கைகளைப் பெறுவதற்காக விவாக, பிறப்பு, மரணப் பதிவாளர்களுக்கு வழிகாட்டுவதற்காக பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிக் கைநூலின் *292* ஆம் கட்டளைக்கு இணங்கச் செயற்படுவது பிரதேச செயலாளர்களின் பொறுப்பாகும். அந்த *292* ஆம் கட்டளை கீழே காட்டப்பட்டுள்ளது.

*“ மரணமொன்றைப் பதிவு செய்யும் போது மரணித்த ஆள் அரசாங்கத்திடமிருந்து ஓய்வூதியம் பெறுபவராக இருந்தாரா என்று பதிவாளர் கவனமாகத் தேடிப் பார்த்தல் வேண்டும். அரசாங்கத்திடமிருந்து ஓய்வூதியம் பெற்று வந்த ஆளொருவரின் மரணத்தை பதிவு செய்த விடத்து, அது தொடர்பாக பி 73 ஆம் இலக்க படிவத்தில் எழுதி (மூன்று பிரதிகளாக) மாவட்டப் பதிவாளருக்கு அல்லது மேலதிக மாவட்டப் பதிவாளருக்கு (கொழும்பு நகரத்தின் மருத்துவப் பதிவாளர்களாயின் பதிவாளர் நாயகத்திற்கு) தாமதமின்றி அறிவிப்பது அவசியமாகும். மரணித்தவரிடம் ஓய்வூதிய அட்டையொன்று இருந்திருப்பின், சாத்தியமான வரையில் அதனையும் பெற்று அறிக்கையுடன் செலுத்துதல் வேண்டும். படிவத்தின் 5 ஆம் கூட்டை பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.*

1. *மரணத்தைப் பதிவு செய்யும் இடத்தின் இலக்கம் மற்றும் திகதி*
2. *ஓய்வூதிய அட்டை இலக்கம்*
3. *மரணித்த ஓய்வூதியகாரருக்கு ஓய்வூதியம் செலுத்திய அலுவலகம்*

*மேற்குறித்த அறிக்கை பதிவாளர்களிடமிருந்து பெறும் போதி மரணித்த ஓய்வூதியகாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் மேற்குறித்த தகவல்களுக்கு மேலதிகமாகப் பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பு நகரத்தின் மருத்துவப் பதிவாளர்கள், பதிவாளர் நாயகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பி 73 ஆம் இலக்க அறிக்கையின் பிரதியொன்றைத் தனக்கு அனுப்புமாறும் உரிய பிரதேச செயலாளர்கள் தமது நிர்வாகத்தின் கீழ் கடமையாற்றும் பதிவாளர்கள் மற்றும் மருத்துவப் பதிவாளர்களுக்கு அறிவித்தல் வழங்க வேண்டும். இந்த அறிக்கையை வாரத்திற்கு ஒருமுறை பெறுவது பொருத்தமானதாகும்.*

*05 இலங்கையில் நடைமுறையிலுள்ள மரணப் பதிவுக்கான சடட நடைமுறைகளுக்கு இணங்க பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டத்தின் 46(1) ஆம் பிரிவிற்கு இணங்க கிராம உத்தியோகத்தர் பிரிவினுள் நிகழும் மரணம் தொடர்பான அறிக்கையொன்றை ஒவ்வொரு கிராம உத்தியோகத்தரும் அந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குரிய பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும். அதற்கிணங்க, கிராம உத்தியோகத்தர்கள் பதிவாளர்களுக்கு ஏதேனும் ஒரு மரணம் தொடர்பான தகவல்களை அறிவிக்கும் போதும் மரணித்தவர் அரசாங்கத்தில் ஓய்வூதியம் பெற்ற ஒருவரா என்று விசாரித்து அறிந்து, அவ்வாறிருப்பின் மரணித்தவரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், ஓய்வூதியம் செலுத்திய அலுவலகம் ஆகிய தகவல்களை பிரதேச செயலாளர்களுக்கு அறிவிப்பது அவசியமாகும்.*

*06 மேற்குறித்த விதத்தில் மரணப் பதிவாளர்களிடமிருந்தும் கிராம உத்தியோகத்தர்களிடமிருந்தும் கிடைக்கும் அறிக்கைகளை பரீட்சித்து தமது அலுவலகத்திற்குரிய ஓயவூதியகாரர்களின் பட்டியலை இற்றைப்படுத்துவதற்கு பிரதேச செயலாளர்கள் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு காரணத்தினால் மேற்குறித்த அறிக்கைகள் மூலம் மற்றொரு பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெற்ற ஓய்வூதியகாரர் ஒருவரின் மரணம் தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்தால் குறித்த பிரதேச செயலாளருக்கு அத்தகவல்களை அறிவிப்பதற்கும் பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

*07* ஓய்வூதியகாரர் ஒருவர் அல்லது விதவை/ தபுதாரர் மற்றும் அநாதை அல்லது அங்கவீனப் பயனாளி ஒருவர் மரணித்ததன் பின்னர் அத்தகவல்கள் உரிய முறையில் அறிவிக்கப்படாமையினால் அப்பணத்தை வேறு தரப்பினர் மோசடியான முறையில் பெற்ற சம்பவங்கள் பற்றி அறியக் கிடைத்துள்ளன. அதனால், மேற்குறித்த நடைமுறையைப் பின்பற்றுவது அத்தியவசியமானது என்பதை வலியுறுத்துவதுடன் அரச நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்குச் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இத்தால் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

*08* ஓய்வூதியகாரர் ஒருவர் அல்லது விதவை/ தபுதாரர் மற்றும் அநாதை ஓய்வூதியப பயன்களைப் பெறும் ஒருவர் தமது வதிவிடத்தை விட்டுச் செல்கின்ற சந்தர்ப்பத்தில் அல்லது வெளிநாடு செல்கின்ற சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் உரிய கிராம உத்தியோகத்தர்கள் பிரதேச செயலாளருக்கு தாமதமின்றி அறிவிப்பது அவசியமாகும்.

*09* மேலே குறிப்பிட்டவாறு, வதிவிடத்தை விட்டுச் செல்லுதல் அல்லது வெளிநாடு செல்தல் என்பன உரிய விதத்தில் அறிவிக்கப்படாமையினால் நிகழும் தவறுகளை உரிய உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்புக்கூற வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக மற்றும் அனர்த்த
முகாமைத்துவ அமைச்சு

**பிரதிகள்:**

01. செயலாளர், உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும்
    மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

    அரசாங்க அதிபர்களின் மாநாட்டில் தேவையான அறிவூட்டலை வழங்குவதற்காகவும் பதிவாளர் நாயகத்தின் ஊடாக அணைத்து பதிவாளர்களுக்கும் இது தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக முறையான சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதற்காக மேலதிக அறிவுறுத்தல்களையும் பொறுப்புக்களையும் உரிய முறையில் வழங்குவதற்காகவும்

02. ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

    இச்சுற்றறிக்கைக்கு இணங்க கிடைக்கப்பெறும் தகவல்களை உரிய முறையில் ஓய்வூதியத் தரவுத் தொகுதியை இற்றைப்படுத்துவதற்கான செயன்முறையொன்றை உருவாக்குவதற்காகவும் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்காகவும்.